திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயக் காலங்களிலே வயல் வெளிகளிலே நல்ல பாம்பு இருப்பது இல்லை. அதைச் சார்ந்த, அதன் ஆண் இனமாகிய சாரைப்பாம்பு இருக்கிறது. அதுவும் அந்த அளவுக்கு வீரியம் உள்ள பாம்புதான். மாண்புமிகு அமைச்சரவர்கள சாரைக்கடா பாம்பு என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சாரைக் கடா என்று ஒரு பாம்பு உண்டா என்று தெரிந்து கொள்கிறேன். அடுத்த பாம்பு கடித்து இறந்தாலும் அல்லது வேறு விவசாயத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும்போது விபத்துக்கள் ஏற்பட்டு அதில் இறந்தாலும் அவர்களுடைய குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, முதலில் இந்த உதவி ஆயிரம் ரூபாய் என்ற அளவிலேதான் இருந்தது. ஆனால் சென்ற ஆண்டு அதாவது 1978-79 வரவு செலவுத் திட்டத்தின்போது இந்த அரசு புதியதாக ஒரு திட்டத்தை அறிவித்து ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, அது மிகக் குறைந்த தொகை என்று கருதிய காரணத்தால் 5 ஆயிரம் ரூபாய் என்று ஆக்கி இருக்கிறது. ஆனால் இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது பற்றிச் சொல்கிறார்கள். அரசு அதைப்பற்றி யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரப்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட்டுகளில் தண்டத் தீர்வை

* வினா எண். 199—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆளியாறு பாசனப் பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும் என்று மார்ச்-ஏப்ரல் மாதத்தில் விவசாயிகள் குழு ஒன்று அமைச்சர்களை சந்தித்து கோரிக்கை வைத்ததா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, இந்தத் தண்டத் தீர்வை விதித்து இருப்பது தாலுக்காவாரியாக எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தத் தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட வேண்டும். ஏனென்றால்

1979 மார்ச் 3]

விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே அவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து இந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்ய அரசாங்கம் உறுதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்தத் தண்டத்தீர்வை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் வருவாய்த்துறை அமைச்சராக இருந்தபோது கோயம்புத்தூரிலே அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டது, அந்தக் கமிட்டியிலே தண்டத் தீர்வை பற்றி தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின்படி 1381-ஆம் பசலி வரைக்கும் உள்ள தண்டத் தீர்வையை ரத்து செய்வது என்றும் அதற்குப் பிறகு 1382,1383,1384-வது பசலிகளுக்கு தண்டத் தீர்வை இரண்டு மடங்காகப் போடுவது என்றும் அதற்குப் பிறகு 5 மடங்காகப் போடுவது என்றும் முடிவு செய்தார்கள். அதுமட்டுமல்ல. எந்தெந்த நிலம் நஞ்சை ஆயக்கட்டிலே இருக்கிறது என்றும், எந்தெந்த நிலம் புஞ்சை ஆயக்கட்டிலே இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டு நஞ்சை ஆயக்கட்டிலே புன்செய் பயிர் செய்தால் தண்டத் தீர்வை போட வேண்டும் என்றும் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக இருக்கும்போது தெரிவித்தார்கள். ஆகவே அதன்படிதான் இப்போது நாங்களும் நடக்கிறோம். ஆனால் இன்றைக்கு அதைப்பற்றி எல்லாம் விவசாயிகள் அரசிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அது குறித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, பரம்பிக்குளம், ஆளியாறு பகுதிகளிலே இந்தத் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே உள்ள வாய்க்கால் கசிந்து நீர் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே நெல்லைத் தவிர வேறு பயிர்கள் போட முடியாத நிலைமை இருக்கிறது. ஆனால் ஒரு முறை நெல்லும் இன்னொரு முறை புஞ்சை பயிரும் மகசூல் செய்ய வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆகவே அவர்கள் வேறு என்ன பயிர் விதைத்தாலும் அவர்களுக்கு தண்டத் தீர்வை 100 ரூபாய், 150 ரூபாய் என்று போடப்பட்டுவிடுகிறது. அந்தப் பகுதியிலே நீர் கசிந்துகொண்டிருப்பதால் வேறு பயிரும் வைக்க முடியாது. இந்த மாதிரி நிலைமையினை அமைச்சரவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இந்தத் தண்டத் தீர்வை என்பதை அறவே நீக்குவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும். கசிவுநீர் எங்கெங்கு ஏற்படும் என்றால் அந்த நிலம், ஓடுகிற வாய்க்காலைவிட தாழ்ந்த இடத்தில் இருந்தால் கசிவுநீர் ஏற்படலாம். சுற்றிலும் நன்செய் இருந்தால் கசிவுநீர் ஏற்பட முடியும். கசிவுநீர் எங்கெங்கு ஏற்படும் என்று பார்த்து, கசிவு நீரால் பாதிக்கப்பட்ட நிலங்களை நன்செய் ஆயக்கட்டில் சேர்ப்பதற்கு — இதுபற்றி முன்னாள் அமைச்சர் அவர்கள் தீர்மானம் போட்டு சேர்த்திருக்கிறார்கள். அதில் கவனக்குறைவு ஏதாவது இருந்தால் அங்குள்ள விவசாயிகள் சொன்னால் இந்த அரசு கவனிக்கும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தண்டத் தீர்வை மொத்தம் எவ்வளவு விதிக்கப்படுகிறது என்ற என் கேள்விக்கு பதில் இல்லை. நாங்கள் தண்டத் தீர்வையை ரத்து செய்திருந்தோம், அதனால் நாங்கள் நல்ல பெயர் வாங்க முடிந்தது. அதே நல்ல பெயரை நீங்களும் வாங்கிக் கொள்வீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நல்ல பெயர் வாங்குவதில் பலவிதம் உண்டு. நல்லதைச் செய்து நல்ல பெயர் வாங்குவதுண்டு. நல்லதைச் செய்தும் நல்ல பெயர் வாங்காமல் இருப்பதும் உண்டு. கெட்டதைச் செய்து, மக்களுக்குத் தெரியாமல் செய்துவிட்டு நல்லதுமாதிரியாக்கி நல்ல பெயர் வாங்குவதும் உண்டு. இந்த அரசை பொறுத்தவரையில், நல்ல பெயர் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மக்களுக்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். நல்ல பெயர் வந்தாலும் வரட்டும், போனாலும் போகட்டும். அதைப் பற்றி கவலையில்லை. முதலில் நீங்கள் 1381 பசலியில் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். 1382,1383,1384 பசலிகளுக்கு இரண்டு மடங்கு போடவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகுள்ள பசலியில் ஐந்து மடங்கு போடவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறீர்கள். அந்தத் தீர்மானம்இன்று நடைமுறையில் இருக்கிறது. அதைமறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இப்போது உள்ளவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மறுபரிசீலனை செய்ய இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

வெள்ளிங்கிரி மலைச்சாலை

*வினா எண். 200— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: